# THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

## MCOP.No.47/2020

Deposition of PW2 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OS Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 03.11.2023.

Evidence Recorded Time: 12.11 P.M to 12.25 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **சசிக்குமார்** | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | **ஜெயராமன்** | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை:-**

நான் தற்போது தமிழ்நாடு மின்சார வாரியம் ஈரோட்டு கிளையில் நிர்வாக மேற்பார்வையாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல மேற்பார்வை பொறியாளருக்கு அழைப்பாணை வந்ததன் பேரில் இன்று நீதிமன்றத்தில் எனக்கு சாட்சியம் அளிக்க அனுமதிக்கடிதம் அளித்தன் பேரில் அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களுடன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். இறந்த கோபால், த/பெ.ராமசாமி என்பவர் பணியில் இருக்கும் போது வாங்கிய சம்பளத்தை பொறுத்து இன்று சம்பள பட்டியல், பணிப்பதிவேடு, இறப்பு சான்று, வாரிசு சான்று ஆகியவை அடங்கிய ஆவணங்களை இன்று நீதிமன்றத்திற்கு கொண்டு வந்து தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்த ஆவணங்கள் 16 தாள்கள் கொண்டது சா.சா.ஆ.1 ஆகும். மேற்படி கோபால் பணியில் சேரும் போதும் கள உதவியாளராக பணியாற்றினார், இறந்த சமயத்தில் மின் பாதை ஆய்வாளராக பணியாற்றினார். மேற்படி பணியில் இருந்தால் எப்போது பணி ஓய்வு பெறுவார் என்றால் 31.05.2025 ல் பணி ஓய்வு பெறுவார். பணி ஓய்வு பெறும் வரை அரசாங்கம் அறிவிக்கும் பண பலன்களை பெற அவருக்கு உரிமை உள்ளதா என்றால் உள்ளது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.8 ஆனது கோபால் இறந்த மாதம் வரையில் வழங்கப்பட்ட சம்பள பட்டியல் என்றால் சரிதான்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

இறந்து போன கோபால் விபத்தின் போது எங்கள் அலுவலகத்தில்தான் பணிபுரிந்தார் என்றால் சரிதான். இறக்கும் போது கோபால் என்னவாக பணியில் இருந்தார் என்றால் மின் பாதை ஆய்வாளர் கிரேடு 3 ஆக பணியில் இருந்தார். அவர் இறப்பிற்கு முன்பு கடைசியாக எவ்வளவு சம்பளம் பெற்றார் என்றால் கடைசியாக அவர் பெற்ற அடிப்படை சம்பளம் ரூ.56,200/- ஆகும். பிடித்தங்கள் போக உள்ள தொகைதான் நிகர சம்பளத்தில் வரும் என்றால் சரிதான். இறந்துபோன நபரின் இறப்பு பலன்களை ஊதிய கொடை அனைத்தும் அவரது வாரிசுகளுக்கு தான் கொடுக்கப்படும் என்றால் சரிதான். கோபால் பணியில் சேர்ந்தது முதல் இறக்கும் வரை Provident fund, பணிக்கொடை ஆகியவற்றின் பிடித்தம் செய்யப்பட்ட தொகைகள் அவரின் வாரிசுகளுக்கு வழங்கப்படும் என்றால் சரிதான். கோபாலின் மனைவி குடும்ப ஓய்வூதியம் பெற்றுவருகிறார் என்றால் சரிதான். கோபாலின் மனைவி தற்போது குடும்ப ஓய்வூதியம் பெற்று வருகிறார் என்றால் ரூ.17,124/- பெற்று வருகிறார். மின் பாதை ஆய்வாளர் கிரேடு 3 என்ற வகைப்பாட்டில் வரும்.

**<u>மறுவிசாரணை -</u>** இல்லை.

ஒம்/-PW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.